From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 138/18

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Suguna | Father/Husband Name | : Veeraiyan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 22.01.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தற்போது தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்றாம் வருடம் முதுநிலை பட்டப்படிப்பு படித்து வருகிறேன் நான் கடந்த 02.06.2017ம் மேலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது இரவு 10.30 மணியளவில் 38 வயது மதிக்கதக்க மனோகரன் என்பவர் தெரிந்த நபர்களால் தாக்கப்பட்டதாக கூறி இடது முழங்கைக்கு மேல் வெட்டுக்காயமும், உடம்பு முழுவதும் ஊமைக்காயத்துடன் சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்து தக்க முதலுதவி செய்து அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவர் 02.06.2017 முதல் 11.06.2017 வரை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருடைய காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **( அந்த காயச்சான்று அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

அன்றையதினமே இரவு 10.20 மணியளவில் 27 வயது மதிக்கதக்க குமார் என்பவர் தெரிந்த நபர்களால் தாக்கப்பட்டதாக கூறி வலது முழங்கைக்கு மேல் வெட்டுக்காயமும், இடது முழங்கை மற்றும் பின் முதுகில் பல்வேறு சிராய்ப்பு காயத்தோடும் சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்து தக்க முதலுதவி செய்து அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவர் 02.06.2017 முதல் 11.06.2017 வரை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருடைய காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **( அந்த காயச்சான்று அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** பொதுவாக மேற்படி காயம்பட்ட நபரை பிடித்து கீழே தள்ளிவிட்டாலோ, கொடுமையான ஆயுதங்களினால் தாக்கினாலோ, மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதுசம்மந்தமாக போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

**1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டுள்ளது. 6 எதிரி இளவர்.**

**1 முதல் 5, 7 எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை:**

அசா1, அசா2 ஆகியோர்கள் என்னிடம் சிகிச்சைக்காக வந்ததாக சொல்லப்பட்டபோது மதுபோதையில் இருந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் இருவரையும் கார்த்திகேயன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்துள்ளார். அவ்வாறு அவர்கள் சிகிச்சைக்கு வந்தபோது தெளிவான மனநிலையுடன், ஆரோக்கியமாக இருந்தார்கள் என்றால் சரிதான். அதேபோல் விபத்துபதிவேட்டில் சம்பவ இடம் காந்தி நகரில் வைத்து இரவு 07.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாகவும், 20 நபர்களுக்கு மேற்பட்டவர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எவ்வித ஆயுதங்களையும் கொண்டு அவர்களை தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1, அசா2 ஆகியோர்கள் அரிட்டாபட்டி கிராமத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேலூர் அரசு மருத்துவமனையிலிருந்து அரிட்டாபட்டி சுமார் 6 கி.மீ என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து சுமார் 03.30 மணி நேரம் கால தாமத்திற்கு பின்பு சிகிச்சை அசா1, அசா2 வந்ததாக விபத்து பதிவேடுகளில் காணப்படுகிறது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக ஒத்தகடை காவல் நிலையத்தார் என்னிடம் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல விசாரித்தார்கள். அவர் என்னை போலீசார் விசாரித்தபோது அசா1, அசா2யை ஆயுதங்களால் எதிரிகள் தாக்கினார்கள் என்று சிகிச்சையின்போது அவர்கள் என்னிடம் சொன்னதாக நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் எத்தனை நாட்கள் அசா1, அசர்2 சிகிச்சையில் இருந்தார்கள் என்று குறிப்பட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1, அசா2ற்கான காயத்தின் வயது, மற்றும் நிறம் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா1, அசா2 ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து தடுமாறி கீழே விழுந்திருந்தால் நான் கூறியது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. மதுபோதையில் இரவு நேரத்தில் கரடு முரடான பாதையில் தடுமாறி கீழே விழுந்தாலும் நான் கூறியதுபோன்று காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு.